பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
31 10 2025 FRIDAY   6.30 PM
வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் ஊடுருவல்காரர்கள் அச்சுறுத்தலாக உள்ளனர் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- வெறுப்பு அரசியலில் திமுக ஈடுபடுவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.
- அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.
- பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியில் குடியிருப்பு வளாகம் கட்டுவதற்கான எந்தப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- North Coast Open Squash போட்டியில் இந்தியாவின் Rathika  Suthanthira Seelan அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் ஊடுருவல்காரர்கள் அச்சுறுத்தலாக உள்ளனர் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பாரதரத்னா Sardar Vallabhbhai Patel-லின் 150வது பிறந்த தினத்தை ஒட்டி, Ektha நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

ஊடுருவல்காரர்களை அகற்றுவதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

முன்னதாக, தேசிய ஒற்றுமை தின அணிவகுப்பு மரியாதையை பிரதமர் ஏற்றுக் கொண்டார்.

விமானப்படையின் சாகச நிகழ்ச்சியும் இதில் இடம்பெற்றது.

(சவுண்ட் பைட் – ஃப்லைட் சவுண்ட் 24 செகண்ட்ஸ்)

விமானப்படையினரின் இந்த சாகச நிகழ்ச்சி அனைவரையும் பிரமிக்க வைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<<

நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மெட்ரோ ரயில் கட்டமைப்புக்கான தரவரிசை பட்டியலில் இந்தியா 3வது இடத்தில் உள்ளதாக கூறினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பொறுப்பேற்ற பின்னர், மின் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்

இதன் காரணமாக மின் பற்றாக்குறை என்ற நிலை மாறி, மின்மிகை நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றும் திரு. மனோகர் லால் கூறினார்.

>>>>>><<<<<<<

வெறுப்பு அரசியலில் திமுக ஈடுபடுவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பீகார் உட்பட வடமாநில மக்களுக்கு எதிராக வெறுப்பு பிரச்சாரத்தில் ஈடுபட்டது திமுக தான் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளையில், பீகாருக்குச் சென்று ராஷ்ட்ரிய ஜனதா தள் – காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்து வருவதும் திமுக தான் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து கேள்வி எழுப்பினால், தமிழர்களுக்கு எதிராக பிஜேபி செயல்படுவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறுவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தேசியத்தையும், சமூகத்தின் பன்முகத் தன்மையையும், பாரத பண்பாட்டையும் உலகெங்கும் ஒலித்து வருவது பிஜேபி தான் என்றும் அவர் கூறியுள்ளார்.

வடமாநில மக்களுக்கு எதிராக வெறுப்பு பிரச்சாரம் செய்ய மிக மோசமான வார்த்தையை உருவாக்கி, சமூகவலைதளங்களில் பரப்பிய திமுக, தேசியத்தைப் பற்றியும், சமூக நல்லிணக்கம் குறித்தும், வேற்றுமையில் ஒற்றுமை பற்றியும் பிஜேபிக்கு பாடம் எடுக்க வேண்டாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

பிஜேபி-யின் அடிப்படை கோட்பாடே சமூகநீதி, சமநீதி என்பது தான் என்றும் டாக்டர் எல். முருகன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<<

தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி கூறியுள்ளார்.

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 60 நாட்களில் மட்டும் 11 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இதன்மூலம். லட்சக்கணக்கான விவசாயிகள் பயனடைந்துள்ளதாகவும், அவர்களுக்கு 2 ஆயிரத்து 801 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.*

*உண்மை நிலை இவ்வாறிருக்க, நெல் கொள்முதல் குறித்து தவறான தகவல்களை தெரிவிப்பதை அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு. சக்கரபாணி அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.*

*கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக அவர்மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியில் குடியிருப்பு வளாகம் கட்டுவதற்கான எந்தப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவினை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு. எம்.எம். ஸ்ரீவஸ்தவா, நீதிபதி திரு. அருள்முருகன் அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.*

*இந்த வழக்கு தொடர்பாக, மத்திய மாநில அரசுகள், வரும் 12ஆம் தேதிக்குள் பதிலளிக்குமாறும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*வங்கக்கடலில் அடுத்த 48 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் 26 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

வண்டலூர் உயிரியல் பூங்காவில் பிறந்துள்ள மூன்று நீர்யானைக் குட்டிகளை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.

தற்போது இந்த பூங்காவில் 11 நீர்யானைகள் பராமரிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – சுரேகா 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

அரியலூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கான விதைகள் கையிருப்பில் உள்ளதாக ஆட்சியர் திரு. ரத்னசாமி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

கோவை மாவட்டம், வால்பாறைக்குச் செல்ல நாளை முதல் இ-பாஸ் நடைமுறை அமல்படுத்தப்படவுள்ளது.

>>>>>><<<<<<

சட்ட விழிப்புணர்வு குறித்த புகைப்பட கண்காட்சி பெரம்பலூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

மயிலாடுதுறை நகராட்சி வணிக வளாகத்திற்காக கட்டுமானப் பணிகள் இன்று தொடங்கின.

>>>>>><<<<<<

ராணிப்பேட்டை மாவட்டம், மேல்விசாரம் பகுதியில் ஊழல் தடுப்புப் பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஆட்சியர் திரு. ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஊழல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு வாகனத்தின் சேவையை ஆட்சியர் திருமதி. சிவ சௌந்தரவள்ளி இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

North Coast Open Squash போட்டியில் இந்தியாவின் Rathika Suthanthira Seelan அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் காலிறுதி ஆட்டத்தில் அவர் 11-13, 11-4, 14-12, 12-10 என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் Bobo Lami-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று பஹ்ரைனில் நிறைவடைகின்றன.

இப்போட்டியில் இந்தியா 13 தங்கம், 18 வெள்ளி, 17 வெண்கலப் பதக்கங்களை வென்று, பதக்கப்பட்டியலில் ஆறாவது இடத்தை பிடித்தது.

>>>>>><<<<<<

இந்தோனேஷியா பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Krishna Nagar, Nitesh Kumar மற்றும் Haris Mythili Srikumar அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் Sukant Kadam – Promod Bhagat இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் Promod Bhagat – Manisha Ramdass இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

>>>>>><<<<<<

மங்களூர் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Patri அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 21-19, 21-18 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Ishika Jaiswal-ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் Satish Kumar, Anantha Dass Rajkumar, Rounak Chouhan ஆகியோரும், மகளிர் இரட்டையர் பிரிவில் Ashwini Bhat – Shikha Gautam இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மெல்போர்னில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பந்து வீச தீர்மானித்தது

*இதனையடுத்து பேட் செய்த இந்தியா, தொடக்க முதலே விக்கெட்டுகளை இழக்கத தொடங்கி, 18 புள்ளி 4 ஓவரில் 125 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*பின்னர் பேட் செய்த ஆஸ்திரேலியா 13 புள்ளி இரண்டு ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 126 ரன் எடுத்து வெற்றிபெற்றது.*

*ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் ஆஸ்திரேலியா 1-0 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.*

*>>>>>>END<<<<<<<*